1982 மார்ச் 20]

1978 ஆம் ஆண்டு முதல் முதலாக மானிட்டரிங் வாங்கினோம். இப்போது ஐந்து கருவிகள் வாங்கி ஒரு நல்லவகையிலே. அது பயன்படுகிற அளவிற்கு நிச்சயமாக பொறுத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை பொது மருத்துவமனையிலுள்ள குடல் மற்றும் கல்லீரல் நோய் சிறப்பு மருத்துவப்பிரிவு.

* வினா எண். 576 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடல் மற்றும் கல்லீரல் நோய் சிறப்பு மருத்துவப் பிரிவு (Medical Gastro Entrology) சென்னை பொது மருத்துவமனையில் மட்டும்தான் தமிழகத்தில் இருக்கிறது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் மதுரை மருத்துவமனையில் இப்பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) இதற்கான செயற்குறிப்பொன்று மருத்துவக் கல்வி இயக்குநரிடமிருந்து வரப்பெற்று அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை இராஜாஜி மருத்துவமனையிலே அனுமதிக்கப்படுகிற உள்நோயாளிகளிலே ஏறத்தாழ 30 சதவீதத்தினர் இந்த குடல் நோயாலும், கல்லீரல் நோயாலும் அவதிபடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதற்கு வைத்தியம் பார்க்கவேண்டுமென்றால் தனிப்பட்டவர்களிடம் செல்லும்போது 1,000 ரூபாய், 1,500 ரூபாய் என்று கேட்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு ஒருமுறை சொல்கிறபோது தேவை ஏற்படுகிற போது அது செய்யப்படும் என்று சொன்னார்கள். இங்கே சென்னையிலே இருக்கிற அந்த பிரிவைச் சேர்ந்த இயக்குநரும் மதுரையிலே அந்த பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மதுரையிலே இருக்கிற டீன் அவர்களும் அது ஏற்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையை கருதி தென் மாவட்டங்கள் அனைத்தும் பயன்பெறுகிற அளவிற்கு அந்த பிரிவை விரைவாக ஏற்படுத்த அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன் 30 படுக்கைகள் கொண்ட கேஸ்ட்ரோ என்ட்ராலஜி டிபார்ட்மென்ட் இராஜாஜி மருத்துவ மனையிலே துவங்கவேண்டுமென்பதற்காக ஒரு புரோபசல் அனுப்பியிருக்கிறார்கள். அந்த புரோபசலில்—

Reader 1; Tutors 2; Nurses 4; Laboratory Technician Grade I—1; Nursing Assistants—4; Total expenditure on staff Rs. 1.79 lakhs; Non-recurring expenditure; Buildings—Rs. 8 lakhs; Equipment Rs. 2.54 lakhs;

இந்தத் தொகை ஏறத்தாழ 10, 11 லட்சம் மதிப்புள்ள நான் ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சர்; அதற்காக ஒரு குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தினுடைய தீவிர பரிசீலனையில் இருக்கிறது; மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து அந்த பரிசீலனைக்கு உகந்ததாக இருக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த பிரிவினை நிறுவுவதற்கான தேவை செலவினைப் பற்றி சொன்னார்கள். சென்னை மருத்துவக் கல்லூரியில் 200 மாணவர்கள் படிக்கிறார்கள். அதே போன்று மதுரை கல்லூரியிலும் டாக்டர் பட்டத்திற்காக 200 பேர்கள் படிக்கிறார்கள். இங்கே படிக்கிற அந்த 200 மாணவர்கள் குடல், கல்லீரல் நோய் பற்றி, இந்த பிரிவு இருக்கிறதால் அறிந்து தெரிந்து கொள்கிற வாய்ப்பு இருக்கிறது. அதே சமயத்தில் மதுரையிலே இருக்கிற மாணவர்கள் அந்த வாய்ப்பை இழக்கிறார்கள் என்ற அந்த கருத்தைவைத்து எவ்வளவு பணக் கஷ்டம் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக தென் மாவட்டங்களில் இருக்கிற மக்களின் நன்மையைக் கருதி மிக விரைவிலே அந்த பிரிவை ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–00).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய கருத்து, ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாக, சரியாக இல்லை. ஏனென்றால், ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும் ஒவ்வொரு காஸ்டிரோ என்ட்ராலஜி டிபார்ட்மென்ட் வைக்க வேண்டுமென்றால், அது முடியாத காரியம். மருத்துவக் கல்லூரிகளிலே காஸ்டிரோ என்ட்ராலஜி டிபார்ட்மென்ட் எதற்காக

1982 மார்ச் 20]

துவக்கியிருக்கிறார்கள் என்றால், நோயாளிகளுக்குப் பயன்பட வேண்டுமென்பது ஒன்று. இரண்டாவதாக, போஸ்ட் கிராஜு வேட்ஸ், இதில் மேற்பட்டப் படிப்பு படிப்பதற்காக, மற்றும் டி.எம்., அதாவது, அப்பர் கிராஜீவேட்ஸ் மாணவர்கள் படிப் பதற்காகப் பயன்படுகிறது. ஆகவே, எம்.பி.பி.எஸ்., மாணவர் களுக்கு காஸ்டிரோ என்ட்ராலஜி டிபார்ட்மென்ட் தேவையில்லை. அவர்களுக்கு என்ன தேவை என்றால், அந்த வியாதி வரக்கூடிய நேரத்தில், அதற்கு, என்ன, என்ன சிகிச்சை செய்வது, என்பது தான். சாதாரண அன்டர்கிராஜுவேட் படிப்புக்கு அது போதும். அது இப்பொழுது மதுரை மெடிகல் காலேஜிலே நல்லவகையிலே கிடைக்கிறது. 75 சத விகிதம், காஸ்டிரோ என்ட்ராலஜி டிபார்ட்மென்ட் இல்லாமல், சாதாரண மருத்துவ மனைப் படுக் கைகளிலே மெடிக்கல் வார்டுகளிலே கவனிக்கக் கூடியதாக இருக் கிறது. அதைக் கவனிக்கக்கூடிய தகுதி பெற்ற டாக்டர்களும் இருக்கிறார்கள். ஆகவே, இதிலே, எம்.பி.பி.எஸ். மாணவர் களைப் பொறுத்தவரையில், எந்தப் பிரச்னையும் எழவில்லை. இங்கே, மெட்ராஸ் மெடிக்கல் காலேஜிலே என்ன படிப்பு சொல்லப்படுகிறதோ, அதே அளவு கல்வி, அதே தரமான படிப்பு அங்கேயும் சொல்லித் தரப்படுகிறது.

காஞ்சிபுரத்தில் தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகளில் வேலை செய்து வந்தவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டம் :

* வினா எண்—577 **திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா —

காஞ்சிபுரத்தில் S.L.N.S. சர்வீஸ், சஞ்சீவி பஸ் சர்வீஸ் போன்ற தேசிய மயமாக்கப்பட்ட பேருந்துகளில் வேலை செய்து வந்த தொழிலாளர்களுக்கு அரசு பேருந்துகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : வேண்டிய நடவடிக்கைகளை அரசு ஏற்கனவே எடுத்துள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, தேசியமயமாக்கும்போது தனியார் பேருந்துகளில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் இன்றுவரை மாற்று வேலை பெறமுடியாமல் இருப்பதாக அறிகிறேன். அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அரசு முனையுமா என அறிய விரும்புகிறேன்.